**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**உயர் பட்டப்படிப்புகள் பீடம்**

# புதிய அனுமதிகள்

1. **கல்வியியல் முதுமாணி (MED)– 2017/18 (அணி V) வவுனியா பிராந்திய நிலையம்**
2. **பட்டப்பின் கல்வித் தகைமை கற்கை நெறி (PGD in Education) -2017/18 (அணி VI) வவுனியா பிராந்திய நிலையம்**

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

## <u>கல்வியியல் முதுமாணி (MED)</u>

### அனுமதிக்குரிய தகைமைகள்

- ''அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமும், பட்டப்பின் கல்வி டிப்ளோமாவும்''
  அத்துடன்
- ஒரு பாடசாலையில் அல்லது யாதேனும் கல்வி நிறுவனத்தில் குறைந்த பட்சம் **ஐந்து** ஆண்டுகள் கற்பித்தல் அனுபவம் அல்லது மேற்படி கற்கைநெறிக்குப் பொருத்தமான கல்விசார் பணிகளில் குறைந்த பட்சம் **ஐந்து** ஆண்டுகள் அனுபவம்.

### தெரிவு முறைமை:

எழுத்துத் தேர்வும் , நேர்முகத் தேர்வும்
(எழுத்துத் தேர்வு கல்விசார் பொதுத் தகைமையை பரீட்சிப்பதாக அமையும்.)

கற்கைக் காலம்: ஒரு வருடம்
மொழி மூலம் : தமிழ்
கற்கைநெறிக் கட்டணம் : **100,000/-**
விண்ணப்பப் படிவக் கட்டணம்: 1,000/-

## <u>பட்டப்பின் கல்வித் தகைமை கற்கை நெறி (PGD in Education)</u>

### அனுமதிக்குரிய தகைமைகள்

- அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் **பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்தும் கல்வி நிர்வாகிகளிடமிருந்தும்** கோரப்படுகின்றன.
- விண்ணப்பதாரிகள் 50 வயதுக்கு குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

### தெரிவு முறைமை :

எழுத்துத் தேர்வும் , நேர்முகத் தேர்வும்

எழுத்துத் தேர்வு (பொது விவேகம், கல்வியியல் பொதுத்தகைமை) மற்றும் நேர்முகத் தேர்வு இரண்டினதும் பெறுபேறுகளுக்கமைய தெரிவுகள் இடம்பெறும்.

கற்கைக் காலம்: இரண்டு வருடங்கள்
மொழி மூலம் : தமிழ்
கற்கைநெறிக் கட்டணம் : **85,000/-**
விண்ணப்பப் படிவக் கட்டணம்: 1,000/-

**விண்ணப்பப் படிவம் பெறும் முறை:**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் பணம் வைப்பிலிடும் பத்திரத்தைப் பெற்று மக்கள் வங்கி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கிளையில் <u>162-1001-8-0000902</u> எனும் கணக்கு இலக்கத்திற்கு கட்டணத்தை செலுத்தி உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு விண்ணப்ப படிவத்திற்குரிய பெறுமதியான காசுக்கட்டளையுடன் 15/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரியிடப்பட்ட 23 x 10 செ.மீ. அளவுள்ள கடித உறையையும் இணைத்து உதவிப்பதிவாளர் உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்கள் www.jfn.ac.lk/grad எனும் பல்கலைக்கழக வலைதளவசதியூடாகவும் (website) பெற்றுக்கொள்ளலாம். வலைத்தளமூலமாக தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்புபவர்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா 1000/- பெறுமதியான காசுக்கட்டளையை/ மக்கள் வங்கியில் மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்கு செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **கற்கை நெறியின் பெயரினைக் குறிப்பிட்டு** பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் <u>30.04.2017</u> ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு உதவிப்பதிவாளர், உயர்பட்டப்படிப்புகள் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு:- விண்ணப்பப்படிவங்களை வவுனியா வளாக முதல்வர் அலுவலகத்தில் பணம் வைப்பிலிடும் பத்திரத்தைப் பெற்று மக்கள் வங்கியில் <u>162-1001-8-0000902</u> எனும் கணக்கு இலக்கத்திற்கு விண்ணப்பப்படிவக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலமும் விண்ணப்பப்படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **கற்கை நெறியின் பெயரினைக் குறிப்பிட்டு** வளாக முதல்வர் வவுனியா வளாகம் என்ற முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.

உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள், சரியாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்